**நாள் 20.10.2023**
**OS 214/2021**
**வா.சா.1 சாட்சி சரவணன் மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி**

என் மாமனார் 3 இல் ஒரு பங்கு குத்தகை அளப்பார் அது எவ்வளவு என்று எனக்கு நேரடியாக தெரியாது. வரி வாய்தா யார் கட்டுவார்கள் என்று எனக்கு தெரியாது என் மாமனாருக்குதான் தெரியும். ஒப்பந்தம் போட்ட தேதியில் சொத்தின்அனுபவம் பிரதிவாதியிடம் இருந்தது என்றால் சரியல்ல என் மாமனாரிடம் இருந்தது. கிரய ஒப்பந்தத்திற்கான முதத்திரைதாள் நான்தான் வாங்கினேன். ஒப்பந்தம் தட்டச்சு செய்யப்பட்டது. திருவையாறில் உள்ள செந்தில்நாதன் என்பவர் முத்திரைதாளில் தட்டச்சு செய்தார். ஒப்பந்தத்தில் உள்ள வாசகங்களை படித்து பார்த்துதான் கையெழுத்து போட்டேன். என் மாமனார் குத்தகை சாகுபடி செய்தததற்கு கிராம நிர்வாக அலுவலரிடம் அடங்கல் வாங்கி தாக்கல் செய்யவில்லை. குத்தகை சாகுபடி செய்யும்போது கிரய ஒப்பந்தம் செய்யவேண்டிய அவசியம் என்ன என்றால் பிரதிவாதி என்னிடம் கைமாற்றாக பணம் வாங்கியிருந்தார். அதனால் ஒப்பந்தமாக போட்டு கொண்டோம். ரூ.1,00,000 கைமாற்று கடனாக வாங்கியிருந்தார். அதற்கு ஆதாரமாக புரோநோட்டு வாங்கியிருந்தேன். பிரதிவாதி பணத்தை திருப்பி கொடுத்ததும் புரோநோட்டை கிழித்துபோட்டுவிட்டேன். 2020 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் பிரதிவாதி என்னிடம் கடன் வாங்கியிருந்தார். 2021 ஜனவரியில் கொடுத்துவிட்டார். 30.03.2021 இல் கிரய ஒப்பந்தம் போட்டோம். ரூ100 முத்திரைதாள் 1 வாங்கினேன். கிரய ஒப்பந்தம் 1 முத்திரைதாள் மற்றும் ஒருதாளில் எழுதப்பட்டது. இரண்டு தாள்களிலுமே தட்டச்சுதான் செய்யப்பட்டது. கிரய ஒப்பந்தத்தில் இரண்டாம் நபரான இந்த பிரதிவாதி ஆண்டு அனுபவித்து வருகின்ற சொத்தில் ஒரு பகுதியைதான் எனக்கு கிரயம் செய்து கொடுப்பதாக கண்டு எழுதப்பட்டுள்ளது. கிரய ஒப்பந்தத்தில் குத்தகை பற்றி எதுவும் எழுதப்படவில்லை என்றால் சரிதான். கிரய ஒப்பந்தத்திற்கான காலக்கெடு மூன்று மாதம். கிரயம் நிச்சயத்த தொகை ரூ.11,73,000 ஆகும். கிரய ஒப்பந்த தேதியில் முன்பணமாக ரூ.5,00,000 கொடுக்கப்பட்டது. மீதி தொகை ரூ6,73,000 த்தை மூன்று மாதத்தில் கொடுத்து கிரயம் பதிந்து கொள்ளவேண்டும் எனதான் ஒப்பந்தம் போடப்பட்டது. மூன்று மாதத்திற்குள் ரூ.6,73,000 த்தையும் கொடுத்து கிரயம் பதிந்து கொள்ளவில்லை என்றால் சரிதான். நான் தில்லையாடியில் கூலி வேலை பார்க்கிறேன். தண்ணீர்கேன்

போட்டு கொண்டிருக்கிறேன். சிவாலயத்தில் பூஜை செய்கிறேன். எனக்கு ஒவ்வொரு நாளும் இவ்வளவு தொகை என நிரந்தர ஊதியம் இல்லை. எனக்கு ஒரு நாளைக்கு சுமார் ரூ1000 வரும். எனக்கு மனைவி, நான்கு குழந்தைகள் இருக்கிறார்கள். மூன்று குழந்தைகள் படிக்கின்றனர். என் வருமானத்தை நம்பி தான் என் குடும்பம் இருக்கிறதா என்றால் என் அம்மா குடும்ப ஓய்வூதியம் வாங்குகிறார். என் மனைவி 12 வது வகுப்பை பாதியில் விட்டார். அவர் வீட்டு குடித்தனம். 26.05.2021 இல் பாக்கி தொகையில் ரூ1,30,000 த்தை தான் கொடுத்தேன். நான் குறிப்பிட்ட காலத்திற்குள் தொகை செலுத்தவில்லை என்பதால் கிரய ஒப்பந்தம் ரத்தானதாக சொல்லி பிரதிவாதி 24.09.2021 ஆம் தேதி வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்தார். அதற்கு நான் பதில் அறிவிப்பும் கொடுத்திருக்கிறேன். அறிவிப்பில் பிரதிவாதி ஒப்பந்தத்தை ரத்து செய்வதாகவும், நான் கொடுத்த ரூ 6,30,000 திருப்பி வாங்கி கொள்ளுமாறும் அறிவிப்பில் சொல்லியிருக்கிறார். 12.07.2021 அன்று மீண்டும் ரூ5,00,000 கொடுத்ததாக நான் பதில் அறிவிப்பில் சொல்லியிருக்கிறேன். 12.07.2021 அன்று ரூ5,00,000 கொடுத்ததாகவும் மேற்குறிப்பு கிரய ஒப்பந்தத்தில் ஏற்பட்டதாக என்னுடைய பதில் அறிவிப்பில் சொல்லவில்லை என்றால் சரிதான். ரூ1,30,000 கொடுத்ததற்கு கமலவாசனும், சுப்ரமணி, த/பெ பெருமாளும் சாட்சிகள். ஆனால் அவர்கள் சாட்சி கையொப்பம் போடவில்லை. ரூ1,30,000 கொடுத்ததாக தேதி குறிப்பிட்டு பிரதிவாதியிடம் கையொப்பம் வாங்கியிருக்கிறேன். சாட்சி தற்போது மீண்டும் மாற்றி பிரதிவாதி கையொப்பம் செய்யவில்லை குறித்துதான் கொடுத்திருக்கிறார் என்று சொல்கிறார். 12.07.2021 அன்று ரூ5,00,000 கொடுத்ததற்கு கிரய ஒப்பந்தத்தின் பின்புறம் எழுதி கையெழுத்து வாங்கியிருக்கிறேன். அந்த மேல்குறிப்பிலும் 12.07.2021 என தேதி குறிப்பிட்டு பிரதிவாதியிடம் கையெழுத்து வாங்கியிருக்கிறேன். இதற்கு சாட்சி கையொப்பம் வாங்கியிருக்கிறேன். சாட்சி கமலவாசன், சுப்ரமணி, சந்திரசேகர், பக்கிரிசாமி ஆகியோரிடம் சாட்சி கையொப்பம் வாங்கியிருக்கிறேன். அவர்கள் தேதிபோட்டு கையெழுத்து போட்டிருக்கிறார்கள். சாட்சி கையெழுத்து போட்டவர்கள் யார் யார் என்ற விபரத்தை வழக்குரையில் சொல்லியிருக்கிறேன். மூன்று மாத காலத்தை தாண்டிதான் ரூ5,00,000 கொடுத்தேன். ரூ5,00,000 த்தை 12.07.2021 ஆம் தேதி அன்று கொடுக்கவில்லை என்றும் கொடுத்ததாக பொய் சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. கிரய ஒப்பந்தத்தின் பின்புறத்தில் உள்ள

மேற்குறிப்புகளை பிரதிவாதிதான் எழுதினார். 12.07.2021 ஆம் தேதியன்று நான் பணம் கொடுத்ததாக சொல்லும் தேதியில் ஒப்பந்தம் காலாவதியாகி இருந்தது என்றால் சரியல்ல. கால நீட்டிப்பு ஒப்பந்தம் எதுவும் எழுத்து மூலமாக போடவில்லை. என்னுடைய கணக்குபடி உள்ள மீத தொகை ரூ43,000 த்தை கிரய பத்திரம் பதியும் தேதியில் கொடுப்பதாக பேசி கொண்டோமா என்றால் ஆமாம். கிரய பத்திரத்திற்கு முத்திரைதாள் வாங்கி தட்டச்சு செய்து ரூ43,000 த்தையும் கையில் வைத்துகொண்டு பத்திரம் பதிய கேட்டேனா என்றால் இல்லை. எப்ப பதியலாம் என்றுதான் கேட்டேன். பத்திரம் பதிய வரச்சொல்லி நான் பிரதிவாதிக்கு எழுத்து மூலமாக அறிவிப்பு தரவில்லை. ரூ1,30,000 க்கான மேற்குறிப்பு ஒரே பேனாவால் எழுதப்பட்டுள்ளதா என்றால் ஆமாம். ரூ5,00,000 த்திற்கான மேற்குறிப்பு ஒரே பேனாவால் எழுதப்பட்டுள்ளதா என்றால் ஆமாம். ரூ5,00,000 த்திற்கான மேற்குறிப்பில் இப்படிக்கு என்பதற்கு கீழே உள்ள கையெழுத்து யாருடைய கையெழுத்து என்றால் பிரதிவாதியின் கையெழுத்து. அந்த கையெழுத்து பிரதிவாதியின் கையெழுத்து அல்ல என்றால் சரியல்ல. அந்த மேற்குறிப்பும் பிரதிவாதியின் கையொப்பமும் நானாக போட்டது என்றால் சரியல்ல. பிரதிவாதி கிரய ஒப்பந்தத்திற்காக ரூ6,30,000 மட்டுமே வாங்கியிருக்கிறார் என்றால் தவறு. ரூ11,30,000 தொகையை பிரதிவாதி என்னிடம் வாங்கவில்லை என்றால் சரியல்ல. கிரய ஒப்பந்தத்திற்கு பிறகு நான் பிரதிவாதியை மூன்று முறை பார்த்திருக்கிறேன். கிரய ஒப்பந்தப்படி பாக்கி கிரயத்தொகையை கொடுத்து கிரயம் பதிவு செய்துகொள்ள நான் தயாராக இல்லை என்றால் சரியல்ல. மீதமுள்ள கிரயத்தொகை ரூ 5,43,000 த்தை கொடுத்து கிரய பத்திரத்தை பதிவு செய்துகொள்ளுமாறு பிரதிவாதி என்னை பலமுறை கேட்டும் நான் மீதித்தொகையை கொடுத்து பதிவு செய்துகொள்ள தயாராக இல்லை என்றால் சரியல்ல. கிரய ஒப்பந்தப்படி நான் நடந்து கொள்ளாததால் தான் ஒப்பந்தத்தை ரத்து செய்து பிரதிவாதி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளார் என்றால் சரியல்ல. பிரதிவாதி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிய பிறகு நான் ரூ5,00,000 த்தை 12.07.2021 அன்று கொடுத்ததாக பொய்யாக கூறி பதில் அறிவிப்பு கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் பதில் அறிவிப்பு கொடுத்தபிறகு கிரய ஒப்பந்தத்தில் ரூ5,00,000 த்திற்கான மேற்குறிப்பை நானே எழுதி பிரதிவாதியின் கையெழுத்தை நானே போர்ஜரியாக போட்டு அந்த கிரய ஒப்பந்தத்தை கொண்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் கேட்டுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கதல்ல என்றாலும் என்னுடைய வழக்கு

நிலைநிற்கதக்கதல்ல என்றால் சரியல்ல. பிரதிவாதியின் சொத்தை அபகரிப்பதற்காக இந்த பொய்யான வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி என் மீது காவல்த்துறையில் புகார் கொடுத்தார். அதில் பணத்தை வாங்கி கொண்டு ஒப்பந்தத்தை ரத்து செய்து கொடுக்க சொன்னார். நான் காவல்நிலையத்தில் அதற்கு ஒப்புகொள்ளவில்லை. சிவில் கோர்ட்டில் பார்த்து கொள்கிறேன் என்று காவல்நிலையத்தில் எழுதி கொடுத்துவிட்டு வந்துவிட்டேன். வழக்கறிஞர் அறிவிப்பிற்கு பிறகுதான் காவல்நிலையத்தில் புகார் ஏற்பட்டதா என்றால் ஆமாம். 12.07.2021 அன்று நான் ரூ5,00,000 கொடுக்கவில்லை என காவல்நிலையத்தில் ஒப்புகொண்டேன் என்றால் சரியல்ல. அவ்வாறு ஒப்புகொண்டுவிட்டு பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல. வழக்கு சொத்து குத்தகை சாகுபடியில் இருந்ததாகவும் என்னுடைய மாமனார் அனுபவத்தில் இருந்ததாகவும் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு என் அனுபவத்தில் இருந்ததாகவும் தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/- A. மலர்விழி)
2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.